தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1973 மார்ச் 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

I. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 266, 267, 268 ஆகிய எண்களுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

கண்ணொளி வழங்கும் திட்ட நிதி

***269. வினா—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972 ஆகஸ்டு முடிய இலவச கண் சிகிச்சை நிதிக்கு எவ்வளவு தொகை சேர்ந்துள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 1972, ஆகஸ்ட் மாதம் முடிய ரூ. 15,61,110.55 சேர்ந்திருந்தது.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல திட்டத்திற்கு நாடெல்லாம் நிதி தர வேண்டும் என்ற அடிப்படையில் வருவாய் மிகுந்த கோயில்களிலிருந்து நிதி பெறுவதற்கு அரசாங்கம் ஏதேனும் தனி நடவடிக்கை எடுப்பதற்கு முயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கோயில் போன்ற அற நிலையங்களை ஒவ்வொன்றுக்கும் தனியாக வலியுறுத்துவது என்பது முறை அல்ல. ஆனால், பொதுவாக, இதற்காக வேண்டுகோள் தரப்பட்டிருக்கிறது. சில அற நிலையங்களில் அவர்களே கூட சில கண் சிகிச்சை முகாம்களுக்கு ஓரளவு தொகை தந்து அந்த வட்டாரத்தில் நடத்தி வருகிறார்கள்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்தக் கண்ணொளி வழங்கும் திட்டத்தின்கீழ் தொகை வசூலித்து இப்பணி நடைபெறுவதாகச் சொல்லப் படுகிறது. குடும்ப நலத் திட்டத்திற்கு மத்திய அரசு உதவுவது போல, இப்படிப்பட்ட கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கும் ஏதாவது தொகை கேட்டு வாங்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த அரசுக்கு, யார் கொடுப்பதாக இருந்தாலும்கூட வாங்கிக்கொள்கிற எண்ணம் உண்டு. மத்திய அரசும் இதற்கு உதவி செய்யலாம். ஆனால், மத்திய அரசு குடும்ப நலத் திட்டத்தினை ஒரு தேசியத் திட்டமாக ஏற்கெனவே ஏற்றுக்கொண்டு அதை இன்னும் வெற்றி கரமாகச் செயல்படுத்த முயற்சி செய்துகொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப்பற்றி அவர்களும் இப்பொழுது அறிந்துகொண்டிருக்கிறார்கள். உதவ முன்வருவார்களானால் மிகப் பெரிய நன்றியோடு வரவேற்கப்படும்.

Family Planning Programme

*270 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state the details of facilities offered during the preoperative period to persons seeking sterilisation under the Family Planning Programme?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அறுவைச் சிகிச்சைக்காக வரும் ஒவ்வொருவருக்கும்—ஆணுக்கும் பெண்ணுக்கும்—அவரவருடைய தேவைக்கு ஏற்ப கீழ்க்கண்ட வசதிகள் செய்து தரப்படுகின்றன :—

1. இலவசப் போக்குவரத்து.

2. தங்கி இருக்கிற நேரத்திற்கான இருக்கை வசதி.

3. நோய்க் கிருமிகளைத் தடுப்பதற்கு ஊசி போடுதல்.

4. தங்கியிருக்கும் நாட்களுக்கு உணவு.

5. இலவச மருத்துவ ஆய்வு.

6. டிப்திரியா, பெர்டிசிஸ், டேட்டானஸ் போன்ற நோய்களிலிருந்து குழந்தைகளைக் காக்கும் தடுப்பு முறை.

7. குழந்தைகளைக் கருவுற்றிருக்கிற தாய்மார்களுக்கு வைட்டமின் ஏ, போலிக் ஆசிட், பொஸ் மாத்திரைகளை வழங்குதல்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : திருமணம் ஆகாதவர்கள்கூட பணத்திற்கு ஆசைப்பட்டு கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்வதாகப் பல புகார்கள் இருக்கின்றன. கருத்தடை செய்து கொள்ள வரும்போது . . ., .

1973 மார்ச 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வசதிகளைப்பற்றி மட்டும் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: கருத்தடை செய்து கொள்ள வரும்போது மனைவியையும் அழைத்து வரவேண்டும் என்பதற்கு வகை செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: திருமணம் ஆக வேண்டாம் என்று இருக்கக்கூடிய நல்ல ஆண்கள் செய்துகொள்வதில்கூடத் தவறு இல்லை. சிலர் செய்யக்கூடிய தவறுகள் காரணமாகத் தீமைகள் ஏற்படாமலிருக்க இது ஒரு வகையான பாதுகாப்பாக இருக்கும். ஆனால் அதற்காக அரசின் உதவித் தொகை பெறுவது சரியல்ல. மனைவி கணவனுடைய சம்மதம் பெற்றுத்தான் கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ளவேண்டும் என்கிற கட்டாயத்திலிருந்து இப்பொழுது விதி விலக்கு ஏற்பட்டிருக்கிறது. கணவன்மார்களை மருத்துவ மனைக்கு அழைத்து வந்து சாட்சி சொல்ல வைக்கவேண்டிய அவசியம் பொதுவாக இல்லை, ஆண் உலகம் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

திரு. வி. செல்லதுரை: அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு வயது நிர்ணயிக்கப்பட்டுள்ளதா? அதன் விவரத்தை அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பொதுவாக, திருமண வயது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிற வயதுக்குப் பின்னர்தான் செய்யப்பட வேண்டும். இரண்டு குழந்தைகள் பெற்றுவிட்ட—திருமணம் ஆன தம்பதிகளாக இருப்பவர்களுக்குத்தான் இது வலியுறுத்தப்பட்டு செய்யப்படவேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக் கேள்வியையொட்டி துணைக் கேள்விகள் கேட்கவேண்டும்.

திரு. கா. வேழவேந்தன்: அளிக்கப்பட்டிருக்கிற வசதிகளைப்பற்றி அமைச்சரவர்கள் பட்டியல் போட்டுக் காட்டினார்கள். இவ்வளவு வசதிகள் அளிக்கப்பட்டும்கூட, மூன்று குழந்தைகளுக்கு மேல் ஈன்ற பெற்றோர்கள் இந்த நிலையங்கள் பக்கமே வராமலிருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசின் நிதி உதவியோடு இன்னும் தனி அதிகாரிகளை நியமித்து மூன்று குழந்தைகளுக்குமேல் பெற்ற குடும்பங்களை அடிக்கடி அணுகி, ஒவ்வொரு குடும்பமாகப் போய் அவர்களை மருத்துவ மனைக்கு கொண்டு வர. . . .

(மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்)